# சேலம் மாவட்ட கனிம நிதி அறக்கட்டளை 2019–20 ஆம் நிதியாண்டிற்கான ஆண்டறிக்கை

தமிழ்நாடு மாவட்ட கனிம நிதி அறக்கட்டளை விதிகள் 2017–ன்படி சேலம் மாவட்ட கனிம நிதி அறக்கட்டளை சேலம் மாவட்ட ஆட்சியர் செயல்முறை ஆணை எண் ந.க.எண்.465/2017/கனிமம்/அ நாள் 27.09.2017–ன்படி சங்கங்களின் பதிவு சட்டத்தின்படி பத்திரம் தயார் செய்யப்பட்டு 09.10.2017 அன்று ஆவண எண்.107/2017 ஆக பதிவு செய்யப்பட்டது. மேற்படி கனிம நிதி அறக்கட்டளை கீழ்க்கண்ட மேலாண்மை குழு மற்றும் நிர்வாகக் குழு உறுப்பினர்களைக் கொண்டு அமைக்கப்பட்டுள்ளது.

| வ. எண் | மேலாண்மை குழுவின் அங்கத்தினர்கள் | வ. எண் | நிர்வாகக் குழுவின் அங்கத்தினர்கள் |
|---|---|---|---|
| 1 | மாவட்ட ஆட்சியர், சேலம் | 1. | மாவட்ட ஆட்சியர், சேலம் |
| 2. | மாவட்ட வருவாய் அலுவலர், சேலம். | 2. | மாவட்ட வருவாய் அலுவலர், சேலம். |
| 3. | துணை இயக்குநர், புவியியல் மற்றும் சுரங்கத்துறை, சேலம். | 3. | துணை இயக்குநர், புவியியல் மற்றும் சுரங்கத்துறை, சேலம். |
| 4. | திட்ட இயக்குநர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, சேலம். | 4. | திட்ட இயக்குநர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, சேலம். |
| 5. | துணை இயக்குநர், சுகாதாரப்பணிகள், சேலம். | 5. | மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் ஊராட்சிகள் வளர்ச்சி (PAPD), சேலம். |
| 6. | முதன்மைக்கல்வி அலுவலர், சேலம். | 6. | உதவி இயக்குநர், ஊரக வளர்ச்சித்துறை, சேலம். |
| 7. | மாவட்ட கருவூல அலுவலர், சேலம். | 7. | மாவட்ட அதி திராவிடர் மற்றும் பழங்குடியினர், நல அலுவலர், சேலம். |
| 8. | மாவட்ட சமூக நல அலுவலர், சேலம். | 8. | மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசுக்கட்டுபாடு வாரியம், சேலம். |
| 9. | உதவி இயக்குநர் (ஊராட்சிகள்), சேலம். | 9. | மாவட்ட வன அலுவலர், சேலம். |
| 10. | திரு.ஏ.ரெங்கநாதன், கிராம புனரமைப்பு மற்றும் மேம்பாட்டு திட்டம், 1335ஏ, குறிச்சி இல்லம், குறிச்சி நகர், சத்தியா நகர் அருகில், கொண்டப்பநாயக்கன் பட்டி, சேலம்–636 008. | 10. | மண்டல முதன்மை பொறியாளர், காவேரி கோட்டம், திருச்சி. |

| | | | |
|---|---|---|---|
| 11 | டாக்டர்.சி.கே.முத்துமணி ராஜா, உதவி இயக்குநர் (ஓய்வு), பொதுப்பணித்துறை, நிலத்தடி நீர் பிரிவு, எண்.19/29, சத்குரு இல்லம், சூரமங்கலம், சேலம்–636 005. | 11. | உதவி இயக்குநர், நிலஅளவைப்பதிவேடு துறை, சேலம். |
| | | 12. | மாவட்ட கருவூல அலுவலர், சேலம். |
| | | 13. | மாவட்ட சமூகநல அலுவலர், சேலம். |
| | | 14. | துணை இயக்குநர், சுகாதாரப்பணிகள்,சேலம். |
| | | 15. | இணை இயக்குநர் (வேளாண்மை), சேலம். |
| | | 16. | வருவாய் கோட்டாட்சியர், சேலம். |

2) சேலம் மாவட்ட கனிம அறக்கட்டளைக்காக, சேலம் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் உள்ள பாரத வங்கியில் ஒரு வங்கிக் கணக்கு (கணக்கு எண். 37240368680) துவக்கப்பட்டு சிறு மற்றும் பெருங்கனிமங்களுக்கான உரிமக் கட்டணத்தின் அடிப்படையில் உரிய விதிகளின்படி மாவட்ட கனிம அறக்கட்டளைக்கான நிதி வசூலிக்கப்பட்டு வருகிறது.

3) சேலம் மாவட்டத்தில் 64 பெருங்கனிம குத்தகை உரிமங்களும் 186 சிறுகனிம குத்தகை உரிமங்களும் நடைமுறையில் உள்ளன. இதில், சுற்றுச்சூழல் தடையின்மை சான்று பெற்ற 5 பெருங்கனிம குத்தகை உரிமங்கள் 12.01.2015–க்கு முன்னர் வழங்கப்பட்டவை. இவற்றில் இயங்கத்தில் உள்ள பெருங்கனிம சுரங்கங்கள் மாவட்ட கனிம நிதி அறக்கட்டளைக்கு கனிம ராயல்டி தொகையில் 30 சதவீதம் வசூலிக்கப்பட்டு வருகிறது. இதேபோன்று சிறு கனிமங்களில் சுற்றுச்சூழல் தடையின்மை சான்று பெற்று 12.01.2015–க்கு முன்னர் குவாரி அனுமதி வழங்கப்பட்டு இயக்கத்தில் உள்ள 9 குத்தகை உரிமங்களுக்கு சீனியரேஜ் தொகையில் 30 சதவீதமும், 12.01.2015–க்கு பின்னர் அனுமதி வழங்கப்பட்டு இயக்கத்தில் உள்ள 95 குத்தகை உரிமங்களுக்கு சீனியரேஜ் 10 சதவீத தொகையும் வசூலிக்கப்பட்டு வருகிறது.

4) சேலம் மாவட்டத்தில் குவாரிப்பணிகளால் பாதிப்புக்குள்ளான 162 கிராம ஊராட்சிகள், 11 பேரூராட்சிகள் மற்றும் 3 நகராட்சிகள் (மொத்தம் 176) குவாரி பணிகளால் பாதிக்கப்பட்டுள்ள பகுதிகளாகக் கண்டறியப்பட்டுள்ளதின் விவரம் கீழ்க்கண்டவாறு.

| வ. எண். | பிளாக் பஞ்சாயத்து / ஊராட்சி ஒன்றியம் | கிராமப் பஞ்சாயத்து / கிராம ஊராட்சி |
|---|---|---|
| 1 | சேலம் | மல்லமூப்பம்பட்டி |
| 2 | | செட்டிச்சாவடி |
| 3 | | சன்னியாசிகுண்டு |
| 4 | | சர்கார் கொல்லப்பட்டி |
| 5 | | அய்யம்பெருமாம்பட்டி |
| 6 | | கொண்டப்பநாயக்கன்பட்டி |
| 7 | | ஆண்டிப்பட்டி |
| 8 | | எருமாபாளையம் |
| 9 | வாழப்பாடி | தேக்கல்பட்டி |
| 10 | | திருமானூர் |
| 11 | | புழுதிகுட்டை |
| 12 | ஏற்காடு | தலைசோலை |
| 13 | | ஏற்காடு |
| 14 | | வாழவந்தி |
| 15 | வீரபாண்டி | பெருமாம்பட்டி |
| 16 | | எட்டிமாணிக்கம்பட்டி |
| 17 | அயோத்தியாப்பட்டணம் | மாசிநாயக்கன்பட்டி |
| 18 | | காரிப்பட்டி |
| 19 | | கருமாபுரம் |
| 20 | | உடையாப்பட்டி |
| 21 | | அனுப்பூர் |
| 22 | | வெள்ளாளகுண்டம் |
| 23 | | ஆச்சாங்குட்டப்பட்டி |
| 24 | | மின்னாம்பள்ளி |
| 25 | | பெரியகவுண்டாபுரம் |
| 26 | | கூட்டாத்துப்பட்டி |
| 27 | | மேட்டுப்பட்டி |
| 28 | | கோட்டமேட்டுப்பட்டி |
| 29 | | சிக்கம்பட்டி |
| 30 | பனமரத்துப்பட்டி | ஏர்வாடி வாணியம்பாடி |
| 31 | | சந்தியூர் |
| 32 | | கெஜ்ஜல்நாயக்கன்பட்டி |
| 33 | | அமானி கொண்டலாம்பட்டி |
| 34 | | நிலவாரப்பட்டி |
| 35 | | பள்ளிதெருப்பட்டி |
| 36 | | கம்மாளப்பட்டி |
| 37 | | திப்பம்பட்டி |
| 38 | | குரால்நத்தம் |
| 39 | | பாரப்பட்டி |
| 40 | | தாசநாயக்கன்பட்டி |
| 41 | | தும்பல்பட்டி |
| 42 | | நெய்காரப்பட்டி |
| 43 | | தம்மநாயக்கன்பட்டி |

| வ. எண். | பிளாக் பஞ்சாயத்து / ஊராட்சி ஒன்றியம் | கிராமப் பஞ்சாயத்து / கிராம ஊராட்சி |
|---|---|---|
| 44 | எடப்பாடி | இருப்பாளி |
| 45 | | சித்தூர் |
| 46 | | ஆடையூர் |
| 47 | | வேம்பனேரி |
| 48 | | வெள்ளிரிவெள்ளி |
| 49 | | நெடுங்குளம் |
| 50 | | செட்டிமாங்குறிச்சி |
| 51 | | பக்கநாடு |
| 52 | சங்ககிரி | கந்தேரி |
| 53 | | சின்னாகவுண்டனூர் |
| 54 | | வீராச்சிபாளையம் |
| 55 | | அன்னதானப்பட்டி |
| 56 | | மோரூர்கிழக்கு |
| 57 | | ஐவேலி |
| 58 | | மஞ்சகுட்டை |
| 59 | | புள்ளாகவுண்டாம்பட்டி அக்ரஹாரம் |
| 60 | | ஆலத்தூர் |
| 61 | | கோனேரிப்பட்டி |
| 62 | | மொத்தையயூர் |
| 63 | | தேவண்ணகவுண்டனூர் |
| 64 | நங்கவள்ளி | ஆவடத்தூர் |
| 65 | | வீரக்கல் |
| 66 | | பெரியசோரகை |
| 67 | | சின்னசோரகை |
| 68 | | சூரப்பள்ளி |
| 69 | | சாணாரப்பட்டி |
| 70 | மேச்சேரி | குட்டப்பட்டி |
| 71 | | விருதாசம்பட்டி |
| 72 | | புக்கம்பட்டி |
| 73 | | வெள்ளார் |
| 74 | | பொட்டனேரி |
| 75 | | மல்லிகுந்தம் |
| 76 | | அமரம் |
| 77 | | பள்ளிப்பட்டி |
| 78 | | கூணாட்டியூர் |
| 79 | தலைவாசல் | கோவிந்தம்பாளையம் |
| 80 | | கிழக்கு ராஜாபாளையம் |
| 81 | | சிறுவாச்சூர் |
| 82 | | மணிவிழுந்தான் |
| 83 | | சித்தேரி |
| 84 | கொளத்தூர் | கண்ணாமூச்சி |
| 85 | | காவேரிபுரம் |
| 86 | | மூலக்காடு |
| 87 | | சிங்கிரிப்பட்டி |

| வ. எண். | பிளாக் பஞ்சாயத்து / ஊராட்சி ஒன்றியம் | கிராமப் பஞ்சாயத்து / கிராம ஊராட்சி |
|---|---|---|
| 88 | | சாம்பள்ளி |
| 89 | | பாலமலை |
| 90 | | சித்திரம்பட்டி புதூர் |
| 91 | | ஆலமரத்துப்பட்டி |
| 92 | | லேக்கம்பட்டி |
| 93 | | கருங்கல்லூர் |
| 94 | | நவப்பட்டி |
| 95 | ஆத்தூர் | சீலியம்பட்டி |
| 96 | | அரசநத்தம் |
| 97 | | சொக்கநாதபுரம் |
| 98 | | கல்லாநத்தம் |
| 99 | | கூலமேடு |
| 100 | | கல்பனூர் |
| 101 | | அக்கிச்செட்டிபாளையம் |
| 102 | | தாண்டவராயபுரம் |
| 103 | கெங்கவல்லி | கடம்பூர் |
| 104 | | தகரபுதூர் |
| 105 | | உலிபுரம் |
| 106 | | 95 பேளூர் |
| 107 | | நாகியம்பட்டி |
| 108 | | குடகுமலை |
| 109 | | மண்மலை |
| 110 | | 74 கிருஷ்ணாபுரம் |
| 111 | | நடுவலூர் |
| 112 | பி.என்.பாளையம் | உமையாள்புரம் |
| 113 | | சின்னகல்வராயன் மலை தெற்கு நாடு |
| 114 | | பெரியகல்வராயன்மலை மேல் நாடு |
| 115 | | பெரியகல்வராயன்மலை கீழ்நாடு |
| 116 | | சின்னகல்வராயன் மலைவடக்கு நாடு |
| 117 | கொங்கணாபுரம் | தங்காயூர் |
| 118 | | குரும்பம்பட்டி |
| 119 | | புதுபாளையம் |
| 120 | | எருமைப்பட்டி |
| 121 | தாரமங்கலம் | ஆரூர்பட்டி |
| 122 | | தெசவிளக்கு |
| 123 | | எடையப்பட்டி |
| 124 | காடையாம்பட்டி | கொங்குபட்டி |
| 125 | | செம்மாண்டப்பட்டி |
| 126 | | குண்டுக்கல் |
| 127 | | மூக்கனூர் |
| 128 | | உம்மிலிக்கம்பட்டி |
| 129 | | டேனிஷ்பேட்டை |
| 130 | | நடுப்பட்டி |

| வ. எண். | பிளாக் பஞ்சாயத்து / ஊராட்சி ஒன்றியம் | கிராமப் பஞ்சாயத்து / கிராம ஊராட்சி |
|---|---|---|
| 131 | | தீவட்டிப்பட்டி |
| 132 | | கூ.குட்டப்பட்டி |
| 133 | | வேப்பிலை |
| 134 | | கனவாய்புதூரார் |
| 135 | | தாராபுரம் |
| 136 | | பன்னப்பட்டி |
| 137 | | பூசாரிப்பட்டி |
| 138 | | காருவள்ளி |
| 139 | ஓமலூர் | கோட்டைமாரியம்மன் கோவில் |
| 140 | | கொல்லப்பட்டி |
| 141 | | எட்டிக்குட்டப்பட்டி |
| 142 | | சிக்கனம்பட்டி |
| 143 | | சங்கீதப்பட்டி |
| 144 | | பச்சனம்பட்டி |
| 145 | | தாத்தியம்பட்டி |
| 146 | | வெள்ளாளப்பட்டி |
| 147 | | சிக்கம்பட்டி |
| 148 | | கோல்நாயக்கன்பட்டி |
| 149 | | முத்துநாயக்கன்பட்டி |
| 150 | | பாகல்பட்டி |
| 151 | | மாங்குப்பை |
| 152 | | வெள்ளக்கல்பட்டி |
| 153 | | திண்டமங்கலம் |
| 154 | | காமலாபுரம் |
| 155 | | எம்.செட்டிப்பட்டி |
| 156 | | தேக்கம்பட்டி |
| 157 | | தும்பிபாடி |
| 158 | | பொட்டிபுரம் |
| 159 | | மூங்கில்பாடி |
| 160 | மகுடஞ்சாவடி | ஏ.புதூர் |
| 161 | | ஏ.தாலையூர் |
| 162 | | வைகுந்தம் |

| வ. எண். | பேரூராட்சிகள் |
|---|---|
| 163 | பி.என்.பட்டி |
| 164 | பனமரத்துப்பட்டி |
| 165 | பனமரத்துப்பட்டி வார்டுகள் |
| 166 | தேவூர் |
| 167 | தேவூர் வார்டுகள் |
| 168 | வனவாசி |
| 169 | வார்டு எண்.6 வனவாசி |
| 170 | வார்டு எண். 71 வனவாசி |

| வ. எண். | பேரூராட்சிகள் |
|---|---|
| 171 | அரசிராமணி பிட்–II |
| 172 | அரசிராமணி பிட்–II வார்டுகள். |
| 173 | வார்டு 10, உள்ளன்காடு, பி.என்.பட்டி |

| வ. எண். | நகராட்சி |
|---|---|
| 174 | நரசிங்கபுரம் |
| 175 | நரசிங்கபுரம்– வார்டு 10, கல்லுடைத்தான் மலை |
| 176 | முட்டல். |

5) சேலம் மாவட்ட கனிம நிதி அறக்கட்டளை நிதியாக 31.03.2020–ம் தேதிவரை ரூ.13,25,82,397/– (ரூபாய் பதிமூன்று கோடியே இருபத்தி ஐந்து லட்சத்து எண்பத்தி இரண்டாயிரத்து மூன்னூற்று தொண்ணூற்று ஏழு மட்டும்) வசூலிக்கப்பட்டு அறக்கட்டளை வங்கிக் கணக்கில் வரவு வைக்கப்பட்டுள்ளது. இதில், 2019–20–ம் நிதியாண்டில் சேலம் மாவட்ட கனிமநிதி அறக்கட்டளையின் நிர்வாக செலவில் 6%-லிருந்து அரசாணை எண்.112 தொழிற் (எம்எம்டி.1) துறை நாள் 30.05.2019–ன்படி 1% –ம் மட்டும் இயக்குநர், புவியியல் மற்றும் சுரங்கத்துறை, கிண்டி, சென்னை அலுவலக யூனியன் பேங்க் வங்கி கணக்கு எண்.570402010007576–க்கு ரூ.2,54,041/– (ரூபாய் இரண்டு லட்சத்து ஐம்பத்தி நான்காயிரத்து நாற்பத்தி ஒன்று மட்டும்) செலுத்தப்பட்டுள்ளது.

மேலும், இயக்குநர், புவியியல் மற்றும் சுரங்கத்துறை, சென்னை அவர்களது நேர்முக கடித எண்.4835/பிஎம்.1/2019–1 நாள் 20.03.2020–ன்படி சேலம் மண்டல இணை இயக்குநர் அலுவலக கட்டிடம் கட்ட சேலம் மாவட்ட கனிமநிதி அறக்கட்டளையின் நிர்வாக செலவில் 5%-லிருந்து ரூ.65,00,000/– (ரூபாய் அறுபத்தி ஐந்து லட்சம் மட்டும்) மேற்படி இயக்குநரக வங்கி கணக்கு எண்ணிற்கு செலுத்தப்பட்டுள்ளது.

6) சேலம் மாவட்ட கனிம நிதி அறக்கட்டளையின் நிர்வாக செலவினங்களுக்காக **31.03.2020–ம்** தேதிவரையில் **ரூ.10,86,993/–** (ரூபாய் பத்து லட்சத்து எண்பத்தி ஆறாயிரத்து தொள்ளாயிரத்து தொண்ணூற்று மூன்று மட்டும்) செலவு செய்யப்பட்டுள்ளது.

7) **2019–20–**ஆம் நிதியாண்டில் சேலம் மாவட்ட கனிம கட்டமைப்பு அறக்கட்டளை மூலமாக கீழ்க்கண்ட திட்டங்களுக்கு ஒப்புதல் வழங்கப்பட்டு நிறைவேற்றப்பட்டுள்ளது.

| வ. எண் | திட்டத்தின் நோக்கம் | பணியின் விபரம் | ஒப்புதல் வழங்கிய தொகை (ரூ) | செலவிடப்பட்ட தொகை (ரூ) | நடைமுறைப்படுத்தும் அலுவலர் | உயர் முன்னுரிமை / பிற முன்னுரிமைத் திட்டம் |
|---|---|---|---|---|---|---|
| 1. | சுகாதாரம் | கோனேரிப்பட்டி, ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு ஸ்கேன் இயந்திரம் வழங்கியது | **3,19,000** | **3,18,600** | துணை இயக்குநர், சுகாதாரப்பணிகள், சேலம். | உயர் முன்னுரிமைத் திட்டம் |
| 2. | சுகாதாரம் | செட்டிமாங் குறிச்சி, ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு, ஸ்கேன் இயந்திரம் வழங்கியது | **3,19,000** | **3,18,600** | துணை இயக்குநர், சுகாதாரப்பணிகள், சேலம். | உயர் முன்னுரிமைத் திட்டம் |
| 3. | சுகாதாரம் | தாராபுரம், ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு ஸ்கேன் இயந்திரம் வழங்கியது | **3,19,000** | **3,18,600** | துணை இயக்குநர், சுகாதாரப்பணிகள், சேலம். | உயர்முன்னுரிமைத் திட்டம் |
| 4. | சுகாதாரம் | பக்கநாடு, ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு ஸ்கேன் இயந்திரம் வழங்கியது | **3,19,000** | **3,18,600** | துணை இயக்குநர், சுகாதாரப்பணிகள், சேலம். | உயர்முன்னுரிமைத் திட்டம் |
| 5. | சுகாதாரம் | எடப்பாடி நகர்புற ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு ஸ்கேன் இயந்திரம் வழங்கியது | **3,19,000** | **3,18,600** | துணை இயக்குநர், சுகாதாரப்பணிகள், சேலம். | உயர்முன்னுரிமைத் திட்டம் |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 6. | உள் கட்டமைப்பு | பெத்தநாயக்கன்பாளையம் வட்டம், ஏத்தாப்பூர் அரசு மேல் நிலைப்பள்ளி மாணவர்களுக்கு நடைப்பாதை அமைத்தல் | 20,00,000 | 19,82,691 | செயற்பொறியாளர், பொதுப்பணித்துறை (கட்டிடம்), சேலம். | பிறமுன்னுரிமைத் திட்டம் |
| | | மொத்தம் | 35,95,000 | 35,75,691 | | |

8) மேற்படி ஒப்பளிப்பு வழங்கப்பட்ட 6 திட்டங்களுக்கான மொத்த தொகை ரூ.35,95,000/—ஆகும். இதில், ரூ.35,75,691/— தொகையில் திட்டங்கள் முடிக்கப் பட்டுள்ளது. மேற்படி முடிக்கப்பட்ட திட்டங்களிலிருந்து மீதமான ரூ.19,309/— சேலம் மாவட்ட கனிம நிதி அறக்கட்டளை கணக்கிற்கு திருப்ப இருசால் செய்யப்பட்டுள்ளது.

9) கொரானா பரவலை தடுக்கும் பொருட்டு 2019—20—ஆம் நிதியாண்டில் மத்திய அரசின் கனிமவள செயலாளர் அவர்களது நேர்முக கடித எண்.7/2/2020—எம்ஜவி நாள் 28.03.2020—ல் வழங்கப்பட்டுள்ள வழிகாட்டு நெறிமுறைகளின்படி கீழ்க்கண்ட திட்டங்களுக்கு ஒப்புதல் வழங்கப்பட்டு நிறைவேற்றப்பட்டுள்ளது.

| வ. எண் | திட்டத்தின் நோக்கம் | பணியின் விபரம் | ஒப்புதல் வழங்கிய தொகை (ரூ) | செலவிடப்பட்ட தொகை (ரூ) | நடைமுறைப்படுத்தும் அலுவலர் | உயர் முன்னுரிமை / பிற முன்னுரிமைத் திட்டம் |
|---|---|---|---|---|---|---|
| 1. | சுகாதாரம் | கொரான பாதிப்படைந்த நோயாளிகளுக்கு 30 ஐசியூ கட்டில் | 15,00,000 | 14,65,030 | முதல்வர், அரசு மோகன குமாரமங்கலம் பொது மருந்துவமனை, சேலம் | உயர் முன்னுரிமைத் திட்டம் |
| 2. | சுகாதாரம் | கொரான பாதிப்படைந்த நோயாளிகளுக்கு 65எண்ணிக்கையில் துப்புரவு பொருட்கள் | | 9,912 | முதல்வர், அரசு மோகன குமாரமங்கலம் பொது மருந்துவமனை, சேலம் | உயர் முன்னுரிமைத் திட்டம் |
| 3. | சுகாதாரம் | கொரான பாதிப்படைந்த நோயாளிகளுக்கு சிவப்பு, மஞ்சள், பச்சை மற்றும் புளு வண்ணங்களில் 76 எண்ணிக்கையிலான தொட்டிகள். | | 18,809 | முதல்வர், அரசு மோகன குமாரமங்கலம் பொது மருந்துவமனை, சேலம் | உயர் முன்னுரிமைத் திட்டம் |
| | | மொத்தம் | 15,00,000 | 14,93,751 | | |

10) மேற்படி ஒப்பளிப்பு வழங்கப்பட்ட 3 திட்டங்களுக்கான மொத்த தொகை ரூ.15,00,000/–ஆகும். இதில், ரூ.14,93,751/– தொகையில் திட்டங்கள் முடிக்கப் பட்டுள்ளது. மேற்படி முடிக்கப்பட்ட திட்டங்களிலிருந்து மீதமான ரூ.6,249/– சேலம் மாவட்ட கனிம நிதி அறக்கட்டளை கணக்கிற்கு திருப்ப இருசால் செய்யப்பட்டுள்ளது.

11) சேலம் மாவட்ட கனிம அறக்கட்டளை நிதியை மாநில தலைமை கணக்காயரால் அங்கீகரிக்கப்பட்ட தணிக்கையாளர்களை கொண்டு 2019–20 நிதியாண்டிற்கான கணக்குகள் தணிக்கை மேற்கொள்ளப்பட்டது.

இவ்வறிக்கையானது சேலம் மாவட்ட கனிமநிதி அறக்கட்டளையின் ஒப்புதலுக்காக சமர்ப்பிக்கப்படுகிறது.

20/8/20

தலைவர்,
சேலம் மாவட்ட கனிம அறக்கட்டளை
மற்றும்
மாவட்ட ஆட்சியர், சேலம்.

20/8/20 20/8/2020 20820 20/8/20